
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 135 | 4 Pages | 13.12.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 135 | 4 பக்கங்கள் | 13.12.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க் குடம்பும் மிகை**

**விளக்கம்:** பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள் ஆகையால் அதற்கு மேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ.

# சாதிய பாகுபாடுகளுக்கு எதிராக போராட வேண்டும்: முதல்வர் பேச்சு

சென்னை, டிச.13

வைக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

பெரியாருக்கு எதிராக யாகம் நடத்திய ஊரில் அவருக்கு புகழ் மாலை சூட்டப்பட்டுள்ளது. பெரியாருக்கு கிடைத்த புகழ் மாலைதான் திராவிடத்தின்வெற்றி.வைக்கம்போராட்ட நூற்றாண்டு விழாவை காண கருணாநிதி இல்லையே என்ற வருத்தம் உள்ளது. எதற்கு அஞ்சாமல் பணியாற்றி சமூகத்தை விழுப்புடன் வெற்றி பெற வைத்தவர் பெரியார் என்று அண்ணா கூறினார்.

சமூக அரசியல் போராட்ட வெற்றியின் சின்னமாக வைக்கத்தில் பெரியார் நினைவகம் உள்ளது. வைக்கம் போராட்டம்எப்படிகம்பீரமானதோ அதைபோல பெரியார் நினைவகமும் கம்பீரமானது. வைக்கத்தில் பெரியார் நினைவகம், நூலகம் திறந்து வைக்கப்பட்ட இந்நாள் சமூக நீதி வரலாற்றில் பொன்னெழுத்தளால் பொறிக்கப்பட வேண்டும். சமூக அரசியல் போராட்டத்தின் வெற்றியின் சின்னமாக வைக்கம்நினைவகம்அமைந்துள்ளது.

வைக்கம் ஒடுக்க முறையை எதிர்த்த கேரள காங்கிரஸ் தலைவர்கள் கைதாகினர்; வைக்கம் போராட்டத்தின் போது பெரியார் இரு முறை கைதானார். வைக்கம் போராட்ட நினைவு அஞ்சல் தலையை விரைவில் வெளியிட உள்ளோம். இனி நாம் அடையவிருக்கு வெற்றிகளுக்கு அடையாளமாக வைக்கம் நினைவகம் இருக்கும். பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தது எனக்கு கிடைத்த வரலாற்று பெருமை.

பெரியார் நூலகம் கட்டிய கேரள முதல்மந்திரி பினராயி விஜயனுக்கு தமிழ்நாடு சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அளவில் ஆளுமைமிக்க தலைவராக கேரள முதல்மந்திரி பினராயி விஜயன் திகழ்கிறார். கேரளாவிற்கு வரும் அனைவரும் வைக்கம் நினைவகத்திற்கு வர வேண்டும்.



நாட்டில் சமூக நீதிக்கான தொடக்கப் புள்ளி வைக்கம் போராட்டமாக இருந்தது. வைக்கம் போராட்டத்திற்கு தமிழகத்தில் இருந்து பங்கேற்றவர்களின் பட்டியல் நீளமானது. வைக்கம் போராட்டத்தில் வெற்றி பெற்ற பெரியாரை 'வைக்கம் வீரர்' என திரு.வி.க. போற்றினார்.

சாதிய பாகுபாடுகளுக்கு எதிரான நமது போராட்டத்தை தொடர வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக முன்னேறியுள்ளோம். ஆனால் இன்னும் முன்னேற வேண்டியுள்ளது. எவ்வளவு சட்டங்கள் இயற்றினாலும் மக்கள் மனதில் மாற்றம் வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் என்பது திராவிடல் மாடல் அரசின் கொள்கையாகவே உள்ளது.

தமிழ்நாட்டை போல கேரளாவிலும் முற்போக்குத் திட்டங்கள் நிறைவேற்றம்.

எல்லாவற்றையும் சட்டம் போட்டு மாற்றிவிட முடியாது. சட்டம் தேவைதான்; அதைவிட மக்கள் மனமாற்றம் மிகவும் முக்கியம். யாரையும் தாழ்த்தி பார்க்காத சமத்துவ எண்ணம் மக்கள் மனதில் வளர வேண்டும். பகுத்தறிவு மற்றும் அரசியல் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். முன்பு இருந்ததைவிட வேகமாக செயல்பட வேண்டும்; நவீன வளர்ச்சியால் பாகுபாடுகளை நீக்க வேண்டும். சமநிலை சமூகத்தை அடைய நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தொடர் அமளி: மாநிலங்களவை பிற்பகல் வரை ஒத்திவைப்பு



புதுடெல்லி, டிச.13

நாடாளுமன்றகுளிர்காலகூட்டத்தொடர்கடந்த25ம்தேதிதொடங்கியது. அப்போது அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை, உத்தர பிரதேசத்தில் சம்பாவில் சமீபத்தில் நடந்த வன்முறை ஆகியவற்றை குறித்து விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள்கடும்அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

அதேவேளை, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்திக்கும் அமெரிக்க தொழிலதிபர் ஜார்ஜ் சாரோசின் நிறுவனத்திற்கும் தொடர்பு இருப்பதாக பாஜக குற்றஞ்சாட்டியுள்ளது. ஜார்ஜ் சாரோஸ் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள பாஜக அவரது நிறுவனத்துடன் சோனியா காந்திக்கு தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டி வருகிறது. இந்த விவகாரத்தை விவாதிக்க வேண்டுமென மாநிலங்களவையில் பா.ஜ.க. இன்று கோரிக்கை விடுத்தது.

அதானி விவகாரத்தை விவாதிக்க வேண்டுமென காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி எம்.பி.க்களும், ஜார்ஜ் சாரோஸ் நிறுவனத்திற்கும் சோனியா காந்திக்கும் இடையேயான தொடர்பை விசாரிக்க வேண்டுமென பாஜக தலைமையிலான கூட்டணி எம்.பி.க்களும் மாநிலங்களவையில் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் ஜகதீப் தன்கர் அறிவித்தார்.

# சத்தீஷ்காரில் பாதுகாப்புப்படையினர், நக்சலைட்டுகள் இடையே துப்பாக்கி சண்டை



ராய்ப்பூர், டிச.13

இந்தியாவில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாக சத்தீஷ்கார் உள்ளது. இம்மாநிலத்தில், நக்சலைட்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள். நக்சலைட்டுகளுக்கு எதிரான இந்த தேடுதல் நடவடிக்கையின் போது அவ்வப்போது பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே என்கவுன்டர் நடைபெறுகிறது.

அந்த வகையில், சத்தீஷ்காரின் நாராயண்பூர் மாவட்டத்தில் உள்ள அபுஜ்மாத் வனப்பகுதியில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, அந்த இடத்தை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டனர். அப்போது, அங்கு மறைந்திருந்த நக்சலைட்டுகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே இன்று அதிகாலை 3 மணியளவில் துப்பாக்கி சண்டை வெடித்தது. தற்போதுவரை மோதல் தொடர்ந்து வரும் நிலையில், இது குறித்த விவரங்கள் அடுத்தடுத்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐகோர்ட்டு நீதிபதியை பதவி நீக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம்எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

புதுடெல்லி, டிச.13

அலகாபாத் ஐகோர்ட்டு நீதிபதி சேகர் யாதவ் சமீபத்தில் நடந்த விஸ்வ இந்து பரிஷத் நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதில் பேசிய அவர், பெரும்பான்மையினருக்கு ஆதரவான சட்டம் உள்பட பல்வேறு சர்ச்சைக்குரிய விஷயங்களை குறிப்பிட்டு இருந்தார். இது எதிர்க்கட்சியினர் மற்றும் சிறுபான்மையினரிடையே பெரும் கொந்தளிப்யை ஏற்படுத்தி உள்ளது. அவரது பேச்சை வெறுப்பு பேச்சாக சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சிகள், அவரை பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர நடவடிக்கை எடுத்து உள்ளன.

இதற்காக50எம்.பி.க்களிடம்கையெழுத்துபெறும்நடவடிக்கைகளில் இறங்கியுள்ள அவர்கள், நடப்பு குளிர்கால கூட்டத்தொடரிலேயே பதவி நீக்க தீர்மானம் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பாக மாநிலங்களவை எம்.பி.யும், மூத்த வக்கீலுமான கபில்சிபல் கூறுகையில், 'இதுபோன்ற கருத்துகளை வெளியிடும் எந்த நீதிபதியும் தனது பதவியேற்பு உறுதிமொழியை மீறுகிறார். பதவிப்பிரமாணத்தை மீறுவோர் தனது பதவியில் இருக்க உரிமை இல்லை' என்று தெரிவித்தார். உயர் நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால், நாடாளுமன்ற இரு அவைகளிலும் தீர்மானத்திற்கு பெரும்பான்மை ஆதரவு பெறவேண்டும். அதன் பிறகு ஜனாதிபதி உத்தரவின் பேரிலேயே பதவி நீக்க முடியும்.

# ஸ்ரீரங்கம் ரெங்கநாதருக்கு வைர கிரீடத்தை காணிக்கையாக வழங்கிய இஸ்லாமிய பக்தர்

திருச்சி,டிச.13

108 வைணவ தலங்களில் முதன்மையானது திருச்சி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில். இக்கோவில் பூலோக வைகுண்டம் எனும் சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடு, வெளிமாநிலத்தில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் தினமும் ஸ்ரீரங்கத்திற்கு வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில், ரெங்கநாத கோவிலின் உற்சவர் நம்பெருமாளுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள வைர கிரீடத்தை பரதநாட்டிய கலைஞரான இஸ்லாமிய பக்தர் ஜாகிர் உசேன் என்பவர் கோவில் இணை ஆணையர் மாரியப்பன், தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டர் ஆகியோரிடம் நேற்று வழங்கினார். அப்போது கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு சால்வை அணிவிக்கப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.



அதன் பின்னர் ஜாகிர் உசேன் கூறுகையில், "ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் மேல் உள்ள பக்தியால் இந்த வைர கிரீடத்தை காணிக்கையாக அளித்துள்ளேன். ஏறத்தாழ அரை அடி உயரம் கொண்ட இந்த கிரீடமானது 3,160 கேரட் மாணிக்கக்கல், 600 வைரக் கற்கள், தங்கம் மற்றும் மரகதக் கல்லை கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து ஒற்றை மாணிக்கக்கல் கொண்டு வரப்பட்டு குடைந்து எடுக்கப்பட்டு, 400 கிராம் தங்கத்தில் வைரம், மரகத கற்கள் பதிக்கப்பட்டு செய்யப் பட்டது.

இதனை செய்ய சுமார் 8 ஆண்டுகள் ஆனது. உலகில் முதல் முறையாக மாணிக்க கற்களால் செய்யப்பட்ட வைரக்கிரீடம் என்பது இதன் தனி சிறப்பு. பிறப்பால் நான் முஸ்லிம் மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் ரெங்கநாதர் மேல் உள்ள பற்றால் இதனை செய்துள்ளேன்" என்று கூறினார்.

# தொடர் கனமழை: நாகையில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து சிறுவன் உயிரிழப்பு

நாகப்பட்டினம், டிச.13

தென் மேற்கு, அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலைகொண்டு இருக்கிறது. இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து இன்று இலங்கைதமிழக கடலோரப் பகுதிகளை அடையும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்தநிலையில் நேற்று இரவு பெய்த மழையில் செம்பியன் மகாதேவி கிராமத்தில் முருகராசு என்பவரது கூரை வீட்டின் பக்க வாட்டுச் சுவர் இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த முருகராசு அவரது மனைவி, மகன் மற்றும் மகள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர்.



அவர்களது அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் அவர்களை மீட்டு நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே முருகராசுவின் 8ம் வகுப்பு படிக்கும் மகன் கவியழகன் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்ற 3 பேரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்வு: வெள்ள அபாய எச்சரிக்கை

சென்னை,டிச.13

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான பூண்டி ஏரியின் மொத்த உயரம் 36 அடியாகும். தற்போது நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் பூண்டி ஏரிக்கான நீர்வரத்து காலை 6.00 மணி நிலவரப்படி 1,290 கன அடியாக உள்ளது. நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருவதால் ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

இதனால் ஏரியின் நீர்மட்டம் 35 அடியை தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திற்கு வரும் உபரி நீரைஇன்றுபிற்பகல்1.30மணிக்கு விநாடிக்கு 1,000 கன அடி நீர் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில்கூடுதல் உபரிநீர்திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.

எனவே நீர்த்தேக்கத்திலிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும்கிராமங்களான நம்பாக்கம் கிருஷ்ணபுரம் ஆட்ரப்பாக்கம் ஒதப்பை, நெய்வேலி, எறையூர், பீமந்தோப்பு, கொரக்கதண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம் திருக்கண்டலம், ஆத்தூர், பண்டிக்காவனூர், ஜெகநாதபுரம் புதுகுப்பம் கானிப்பாளையம், வன்னிப்பாக்கம், இடையன்சாவடி, மணலி, மணலி புதுநகர், சடையான்குப்பம், எண்ணூர் மற்றும் கொசஸ்தலையாற்றின் இருபுறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பாக இருக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரிட்டாபட்டி பல்லுயிர் சூழலை பாதுகாக்க வலியுறுத்தி தர்ணா போராட்டம்



மேலூர், டிச.13

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாபட்டி பல்லுயிர் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க வேதாந்தா குழுமம் ஏலம் எடுத்ததாக கூறப்பட்டது. இதற்கு அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பல்வேறு போராட்டங்களையும் நடத்தினர்.

இந்த நிலையில் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினார். இதன் விவரம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கிடையே அரிட்டாபட்டி பல்லுயிர் சூழலை பாதுகாக்க வலியுறுத்தியும், டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராகவும், தெற்குத்தெரு மேலநாட்டார் மக்கள் நல கூட்டமைப்பு சார்பில் மேலூர் அருகே உள்ள வெள்ளரிப்பட்டி டோல்கேட் அருகே இன்று தர்ணா போராட்டம் நடைபெற்றது. மோகன் தலைமையில் நடந்த இந்த போராட்டத்தில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், பெண்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

காலையில் தொடங்கிய தர்ணா போராட்டம் மாலை வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் பங்கேற்றவர்கள் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு அனுமதி அளித்து மதுரை மக்களை அகதிகளாக்கக்கூடாது. அரிட்டாபட்டி பல்லுயிர் சூழலை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தர்ணா போராட்டத்தை முன்னிட்டு மேலூர் டி.எஸ்.பி. சிவக்குமார், இன்ஸ்பெக்டர் சிவசக்தி, சப்இன்ஸ்பெக்டர் ஆனந்தஜோதி தலைமையில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# நேர்மையாளன் என்னை அவதூறு மூலம் வீழ்த்த துடிக்கின்றனர் சீமான்



சென்னை, டிச.13

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியதாவது:

★ ரஜினியை சந்தித்ததை வைத்து என்னை சங்கி என்று திராவிட கருத்தாக்கிகள் முத்திரை குத்துகிறார்கள். ★ ரஜினிகாந்தை அழைத்து 'கலைஞர் எனும் தாய்' நூலை வெளியிட்ட முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் சங்கியாகவில்லையா? ★ கலைஞர்சிலையைவெங்கையா திறந்தது, கலைஞர் நாணயத்தை ராஜ்நாத் வெளியிட்டதற்கு அரசியல் சாயம் பூசாதது ஏன்?

★ அதனைஅரசியல்நாகரிகம் என கதையளந்தவர்கள்ரஜினி உடனான எனது தனிப்பட்ட சந்திப்பிற்கு காவிச்சாயம் பூசுவதேன்?

★ நேர்மையான என்னையும் எனது அரசியலையும் எதிர்கொள்ள முடியாத வக்கற்ற கோழைகள் அவதூறுகள்மூலம் வீழ்த்த துடிக்கின்றனர் என்று கூறினார்.

# அனுமதியின்றி கொடிக்கம்பம் வி.சி.க.வை சேர்ந்த 21 பேர் மீது வழக்கு

மதுரை, டிச.13

மதுரை வடக்கு தாலுகாவுக்கு உட்பட்ட கிழக்கு சட்டமன்ற தொகுதி வெளிச்சநத்தம் கிராமத்தில் கடந்த 7ந்தேதி வி.சி.க. தலைவர் திருமாவளவன் கொடியேற்றுவதற்காக, ஏற்கனவேஇருந்த 25 அடி உயர கொடி கம்பத்தை அகற்றி விட்டு, அனுமதியின்றி கூடுதல் உயரமுள்ள 45 அடி உயர கொடிக்கம்பத்தை கட்சியினர் நிறுவியுள்ளனர்.

இதனை அகற்றுமாறு வருவாய் அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் அறிவுறுத்திய போது கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் வருவாய்த் துறை அலுவலர்கள் ராஜேஷ் மற்றும் பரமசிவம், பழனியாண்டி ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு பெண் வருவாய் ஆய்வாளர் அனிதா செல்போன் பறிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதில் வருவாய்த்துறை அலுவலர்களை பணி செய்ய விடாமல் தடுத்து தாக்கியதாகவி.சி.க.வினர் 21 பேர் மீது சத்திரப்பட்டி போலீசார் 8 பிரிவுகளில் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# தேர்தலை நடத்த தடையில்லை உயர்நீதிமன்றம் தீர்ப்பு




சென்னை, டிச.13

52 ஆண்டுகள் பழமை வாய்ந்த சென்னை பத்திரிகையாளர் மன்றத்துக்கு (பிரஸ் கிளப்) பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படவில்லை. இதனால் தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கிளப்பின் பொதுக்குழுவால் அமைக்கப்பட்ட 12 பேர் கொண்ட சிறப்பு வழிகாட்டுதல் குழுவின் கோரிக்கையின் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பாரதிதாசன் தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இதையடுத்து, 25 ஆண்டுகளுக்கு பிறகு தலைவர், இரண்டு துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளர், பொருளாளர், இணைச் செயலாளர் மற்றும் ஐந்து கமிட்டி உறுப்பினர்கள் பதவிகளுக்கு தேர்தல் டிசம்பர் 15ந்தேதி அன்று நடத்தப்படுவதாக பாரதிதாசன் அறிவித்தார். இதனை தொடர்ந்து தேர்தல் நடத்துவதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில், மெய்யறிவாளன் (எ) விஸ்வநாதன் தேர்தலுக்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கி விட்டதால் தேர்தல் நடைமுறைகளில் தலையிட முடியாது. தேர்தல் முடிவுகள் வெளியான பின் வழக்கு தொடரலாம் எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.

இதனால், மீண்டும் தேர்தல் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. கடைசியாக 1999ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கு பிறகே இந்த ஆண்டு தேர்தல் நடைபெறுகிறது குறிப்பிடத்தக்கது.

25 ஆண்டுகளாக பத்திகையாளர் மன்றத்துக்கு தேர்தல் நடத்த முயன்றும் நடைபெறவில்லை. 2005ம் ஆண்டு தேர்தல் நடத்த முயன்றபோது அசத்துல்லா நீதிமன்றம் சென்று தடை பெற்றார். 2012ம் ஆண்டு தேர்தல் நடவடிக்கை தொடங்கியபோது பெருமாள் (எ) பாரதிதமிழன் நீதிமன்றம் சென்று தடை பெற்றார். அதனை தொடர்ந்து, இந்த ஆண்டு, தேர்தல் நடவடிக்கை ஏறக்குறைய முடிவடையவுள்ள நிலையில் இவர்களின் நண்பர் மெய்யறிவாளன் (எ) விஸ்வநாதன் தடைகோரி நீதிமன்றத்தை அணுகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தினமும் 180 பேருக்கு டெங்கு பாதிப்பு இதுவரையில் 23 ஆயிரம் பேர் பாதிப்பு

சென்னை, டிச.13

தமிழகம் முழுவதும் டெங்கு பாதிப்பு தற்போது அதிகரித்துள்ளது. சென்னை உள்பட எல்லா மாவட்டங்களிலும் பரவலாக நோய் பாதிப்பு உள்ளது. ஜனவரி மாதம் முதல் இதுவரையில் 23 ஆயிரம் பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். தினமும் 180 பேருக்கு டெங்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஜனவரி மாதம் வரை பாதிப்பு இருக்கும் என்று பொது சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செல்வவிநாயகம் தெரிவித்தார். வீடுகளை சுற்றி தேங்கி நிற்கும் தண்ணீரால் கொசுக்கள் உற்பத்தியாகி பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே தண்ணீர் தேங்காமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பெரிய அளவில் பாதிப்பு இல்லை. கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். கொசு ஒழிப்பு, மருந்து தெளித்தல் போன்ற பணிகள் சுகாதாரத்துறை மூலம் எடுக்கப்பட்டாலும் வீடுகளை சுற்றி மழைநீர் தேங்காமல் இருந்தால்தான் கொசு உற்பத்தி குறையும். இதுவரையில் டெங்கு பாதிப்பால் 10 பேர் உயிர் இழந்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கோவில்பட்டி சிறுவன் கொலையில் விசாரணை தீவிரம்: உடலில் காயங்கள் இருப்பதாக போலீசார் தகவல்



கோவில்பட்டி, டிச.13

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி காந்திநகர் பகுதியை சேர்ந்த கார்த்திக் முருகன். தொழிலாளி. இவரது மனைவி பாலசுந்தரி. இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். இளையமகன் கருப்பசாமி. அப்பகுதியில் உள்ள நகராட்சி பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தான்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெற்றோர் வேலைக்கும், அவர்களது மூத்த மகன் பள்ளிக்கு சென்று விட்டனர். கருப்பசாமிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் மட்டும் வீட்டில் தனியாக இருந்தார். அப்போது வீட்டில் இருந்த மாணவன் திடீரென மாயமானார்.

இது தொடர்பான புகாரின் பேரில் கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 தனிப்படைகள் அமைத்து சிறுவனை தேடி வந்த நிலையில் நேற்று காலையில் சிறுவனின் வீட்டின் அருகே இருந்த பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் சிறுவன் கருப்பசாமி சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுவன் மாயமானபோது அவர் அணிந்திருந்த $1\frac{1}{2}$ பவுன் நகைகள் மாயமாகி இருந்ததால் அவர் நகைக்காக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர்.

கருப்பசாமி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனைக்கு பின்னர் சிறுவனின் உடல் நேற்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் அதிக அழுத்தம் காரணமாக சிறுவன் கருப்பசாமி மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்திருக்க வாய்ப்பு இருப்பதாகவும், வாய் மற்றும் உதடு பகுதியில் காயங்கள் இருப்பதாகவும் பிரேதபரிசோதனை தகவலில் தெரிய வந்திருப்பதாக போலீசார் தெரிவித்துள்ளனர். இதனால் அவர் கொலை செய்யப்பட்டிருப்பதை போலீசார் உறுதிபடுத்துகின்றனர்.

அதன்படி குற்றவாளிகளை பிடிக்கும் நோக்கில் நேற்று இரவும் சிறுவனின் வீட்டு பகுதியில் உள்ள வீடுகளில் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். மேலும் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. மோப்பநாய் அந்த வீட்டு பகுதியில் சுற்றி வந்தது.

மேலும் கடந்த 2 நாட்களாக அப்பகுதியில் இருந்த செல்போன் அழைப்பு விவரங்களையும் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர். இதற்கிடையே இந்த வழக்கு தொடர்பாக பெண் உள்பட 4 பேரை போலீசார் சந்தேகத்தின் பேரில் பிடித்து ரகசிய விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பேசுவதால் அவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து போலீசார் கூறும்போது, இந்த வழக்கில் குற்றவாளிகளை விரைந்து பிடிக்க போதிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், 3 தனிப்படைகள் அமைத்து பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருவதாகவும் விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

# தமிழ் சமூகத்துக்கும் இந்தியாவின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய! மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.13

மகாகவி பாரதியாரின் 143வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன்!

தமிழ்க்கவியில், உரைநடையில், தனிப்புதுமை படைத்த செந்தமிழ்த் தேனீ மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாளில் அவரை வணங்குகிறேன்!

மொழி நாடு பெண் விடுதலை பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய! என்று தெரிவித்துள்ளார்.

# வன்னியர் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி 24ந்தேதி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்: ராமதாஸ்



சென்னை,டிச.13

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததன் 1000ம் நாள் வருகிற 24ந் தேதி வருகிறது. அன்று தான் சமூகநீதிக்காக குரல் கொடுத்த தந்தைப் பெரியாரின் நினைவு நாள். அந்த நாளில், அதாவது வருகிற 24ந் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 11 மணிக்கு, வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திதமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாபெரும் மக்கள்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

தந்தைப் பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17ம் நாள் வன்னிய மக்கள் தொடங்கிய போராட்டத்தால் 21 இன்னுயிர்களை இழந்தாலும் கூட, 20 சதவீத இட ஒதுக்கீட்டை வென்றெடுத்துக் கொடுத்தது. இப்போது அவரது நினைவு நாளில் தொடங்கும் அடுத்தக்கட்ட போராட்டமும் வெற்றியில்தான்முடியும்; வன்னியர் சமூகத்திற்கு சமூகநீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் எனக்கு அதிகமாகவே இருக்கின்றன. காஞ்சிபுரம் நகரில் நடைபெறும் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தலைமையேற்று நடத்துவார். மற்ற இடங்களில் நடைபெறும் இந்த போராட்டங்களை பா.ம.க.வின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமையேற்று நடத்துவர். தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காக நடைபெறும் இந்தப் போராட்டங்களில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தேவநூர மஹாதேவாவுக்கு வைக்கம் விருது: தமிழக அரசு





சென்னை, டிச.13

2024ம் ஆண்டிற்கான "வைக்கம் விருது" கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேவநூர மஹாதேவா ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். மக்களின் மொழியியல் உரிமைகளின் மீதான நிலைப்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். மேலும், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயல்பட்டவர். இவர் ஒன்றிய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ மற்றும் சாகித்ய அகாடமி விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.வைக்கம்விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தேவநூர மஹாதேவாவுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேரள மாநிலம் வைக்கத்தில் நாளை (12ந்தேதி) நடைபெற உள்ள வைக்கம் நினைவகம் திறப்புவிழா நிகழ்ச்சியில் வழங்குகிறார்.

# தஞ்சை மாநகராட்சி பள்ளி இட விவகாரம்: மேயர் மனைவி உள்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்ய ஐகோர்ட் உத்தரவு

மதுரை, டிச.13

தஞ்சாவூர் மாவட்டம் கரந்தையைச் சேர்ந்த பத்மநாபன், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

தஞ்சாவூர் மாவட்டம் அருளானந்தம்மாள் நகரில் உள்ள பல ஏக்கர் நிலம் நகராட்சி பள்ளி கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த இடம் வருவாய் ஆவணங்களில் தஞ்சை மாநகராட்சியின் ஆணையர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த 2022 ஆம் ஆண்டு பொன்னுமணி எனும் தனி நபரின் பெயரில் இந்த இடம் சட்ட விரோதமாக மாற்றப்பட்டிருந்தது. சட்ட விரோதமாக, முறைகேடு செய்து தனி நபரின் பெயரில் அந்த இடத்திற்கு பட்டா வாங்கப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கையை நகராட்சி அலுவலர்கள் எதிர்த்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தஞ்சை மாநகராட்சியின் ஆணையர், மேயர், வருவாய் அலுவலர்கள் ஆகியோர் இணைந்து சுயநல நோக்கில் சட்ட விரோதமாக அந்த இடத்தை விற்பனை செய்து, தற்போது மேயரின் மனைவியின் பெயரில் அந்த இடம் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

தற்போதைய தஞ்சை மாநகராட்சி மேயர் ஆளும் கட்சியை சேர்ந்தவர் என்பதால் இந்த விவகாரத்தை தமிழக காவல்துறை விசாரித்தால் விசாரணை நியாயமான முறையில் நடைபெறாது. எனவே இந்த விவகாரம் தொடர்பாக மனுதாரர் அளித்த புகாரின் பெயரில் வழக்கு பதிவு செய்து, வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி கே.கே.ராமகிருஷ்ணன், முன்பாக விசாரணைக்கு வந்தது. விசாரணை செய்த நீதிபதி இந்த வழக்கில், வழக்கின் முக்கியத்துவம் கருதி பொன்னுமணி, தஞ்சை மேயரின் மனைவி சங்கீதா, தஞ்சை மாவட்ட வருவாய் மண்டல அலுவலர் ஆகிய 3 பேரையும், நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்கில் சேர்ப்பதாகவும், வழக்கு தொடர்பாக அவர்களது தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யவும், தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலர் சம்பந்தப்பட்ட இடம் குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

# மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் முத்தரசன்

கும்பகோணம், டிச.13

கும்பகோணத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாடு முழுவதும் விலைவாசி உயர்வு பல மடங்கு அதிகரித்து உள்ளது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும். டங்ஸ்டன் நிறுவனம் தொடங்குவதற்கு மாநில அரசு அனுமதி அளிக்காத நிலையில், கடும் எதிர்ப்பை மீறி மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி கண்டிக்கிறது. மழை, புயல் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் நிவாரணத்தை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். விவசாயம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. எக்டேர் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரத்து 500 நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். டெல்டா மாவட்டங்களில் அதிகம் உள்ள குடிசை வீடுகளை முற்றிலும் நீக்கி கான்கிரீட் வீடுகளாக மாற்றி, குடிசைகள் இல்லாத மாவட்டங்களாக டெல்டா மாவட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும். மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை பேரிடர் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதற்கட்ட புயல் நிவாரணமாக ரூ.2 ஆயிரத்து500கோடி தேவை என மத்திய அரசின் உயர் மட்ட குழுவிடம் கடிதம் கொடுத்து உள்ளார். இதற்கு உரிய மதிப்பளித்து அந்த நிதியை அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பொங்கல் பரிசு தொகுப்பில் சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் வழங்க கோரி ஐகோர்ட்டில் வழக்கு



சென்னை, டிச.13

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகைக்கு தமிழக அரசு ரேஷன் கார்டுதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கிவருகிறது. கடந்த ஆண்டு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு, முந்திரி, உலர் திராட்சை, ஏலக்காய் அடங்கிய பரிசு தொகுப்பு மற்றும் ரூ.1000 ரொக்கப் பணம் வழங்கப்பட்டது.

வருகிற பொங்கல் பண்டிகைக்கும் கடந்த ஆண்டை போல ரொக்க பணம் மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் விவசாயிகள் ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்பட உள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பில், சர்க்கரைக்கு பதிலாக வெல்லத்தை சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். மேலும் தமிழக அரசு வெல்லத்தைச் சேர்க்க உத்தரவிடக்கோரி விவசாயிகள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கு வருகிற 19ந்தேதி விசாரணைக்கு வருகிறது.

காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலாளர் சுவாமிமலை எஸ் விமலநாதன் கூறுகையில், சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் சேர்க்க தமிழக அரசு உத்தரவிட கோரி மதுரை ஐகோ ர்ட்டை அணுகியிருக்கிறோம். கடந்த ஆண்டு இந்த கோரிக்கைக்காக நீதிமன்றத்தை நாடினோம். அப்போது வழக்கை பரிசீலிக்க அரசுக்கு போதிய அவகாசம் அளித்து முன்கூட்டியே மனு தாக்கல் செய்ய நீதிமன்றம் அறிவுறுத்தியது.

அதன்படி நாங்கள் தற்போது ஒரு மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து வெல்லம் கொள்முதல் செய்து ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கி, நடப்பாண்டில் விவசாயிகளின் பொங்கல் பண்டிகையை இனிமையாக்க சம்பந்தப்பட்ட துறைக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றார்.

மேலும் இடைத்தரகர்கள் பிரச்சனையை தவிர்க்க கொள்முதல் செய்யப்படும் வெல்லத்துக்கு உண்டான தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் விவசாயிகள் கூறியுள்ளனர்.

# அவினாசியில் ஒரே அறையில் 2 மாணவிகள் தற்கொலை: வேறு ஏதேனும் காரணமா? விசாரணை



அவினாசி, டிச.13

திருப்பூர் மாவட்டம் அவிநாசி பழங்கரை லட்சுமி நகா் பகுதியை சோ்ந்தவா் மருதாசல மூா்த்தி. இவரது மகள் அவந்திகா (வயது 19). அவிநாசி கங்கவா் வீதியைச்சோ்ந்தரமேஷ் மகள் மோனிகா (19). இவா்கள் இருவரும் திருமுருகன்பூண்டி அருகே உள்ள தனியாா் கல்லூரியில் 3ம் ஆண்டு பட்டப்படிப்பு பயின்று வந்தனா். மேலும் இருவரும் பகுதி நேரமாக அங்குள்ள பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை அவந்திகா வீட்டுக்கு மோனிகா சென்றார். பின்னர் நீண்ட நேரமாகியும் வீட்டின் கதவு திறக்காததால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர் கதவை திறந்து பார்த்த போது உள்ளே அவந்திகா, மோனிகா இருவரும் தூக்குப்போட்ட நிலையில் பிணமாக தொங்கினர்.

இதுகுறித்த தகவல் அறிந்ததும் அவினாசி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று இருவரது உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அவர்கள் எதற்காக தற்கொலை செய்து கொண்டனர்என்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவந்திகா, மோனிகா இருவரும் கல்லூரி மற்றும் எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள். படிக்கும் போதும் ஒன்றாகவே இருந்து படிப்பார்கள். ஆனால் அவர்களது பெற்றோர் ஒன்றாக இருந்து படித்தால் சரியாக படிக்கமாட்டீர்கள். எனவே தனித்தனியாக இருந்து படிக்குமாறு அறிவுறுத்தி உள்ளனர்.

இதனால் தங்களை பிரித்து விடுவார்களோ? என்று பயந்த 2 பேரும் தற்கொலை செய்துள்ளது போலீசார் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. வேறு ஏதேனும் காரணமா என்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நிதி நிலைமை சரியில்ல.. 2 மாதங்கள் பொறுங்கள்.. பெண்களுக்கு ரூ.1000 தருகிற ஆட்சி தி.மு.க. தான் தா.மோ. அன்பரசன்



கூடுவாஞ்சேரி. டிச.13

மகளிர் உரிமை தொகை திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தகுதியுள்ள குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் தகுதியற்றவர்களும் மாதந்தோறும் 1000 ரூபாய் பெறுவதாக புகார்கள் கூறப்பட்டது.

மேலும், பலர் ஏழ்மை நிலையில் இருந்தும் தங்களுக்கு உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்று கூறி வந்தனர். இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது முதலே, குடும்ப தலைவிகளில் யார் யாருக்கு, எதன் அடிப்படையில் உரிமைத் தொகை வழங்கப்படும் என்பதில் தொடங்கி அதற்கு என்னென்ன ஆவணங்களை சமர்பிக்க வேண்டும் என்பது வரை பல்வேறு குழப்ப நிலை நீடித்து வந்தது.

பிறகு, உரிமைத்தொகை திட்டத்தில் பயன்பெறுவதற்காக விண்ணப்பிக்க சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. எனினும், பலர் தங்களுக்கு உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்று குற்றம்சாட்டி வந்தனர். இந்த நிலையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திலிருந்து சுமார் 1.27 லட்சம் பயனாளிகளின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அளித்த பதிலில் இந்த தகவல் வெளியானது. தமிழகத்தில் 2022 ஆம் ஆண்டு முதல் சராசரியாக ஒவ்வொரு மாதமும் சுமார் 58 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே இவ்வாறு உயிரிழந்த பெண்களின் பெயர்கள் பயனாளிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், இன்னும் மகளிர் உரிமை தொகை வராத ஒரு சில பேருக்கு மட்டும் 2 மாதங்களில் வரவு வைக்கப்படும் என்று அமைச்சர் தா. மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளையொட்டி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பங்கேற்ற அமைச்சர் தா. மோ.அன்பரசன் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதன் பின் பேசிய அவர்,

"என்ன பண்ணலை நாங்க. தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களை 90 சதவீதம் நிறைவேற்றி மக்களின் பேரன்பை பெற்றிருக்குற ஒரே தலைவர் தளபதி தான். தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 16 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருகிற ஆட்சி தி.மு.க. ஆட்சி."

"இன்னும் ஒரு சில பேருக்கு மகளிர் உரிமை தொகை வந்திருக்காது. இப்போ சொல்றேன்...

இன்னும் 2 மாதங்கள் பொறுங்கள்.. இப்போ நிதிநிலை சரியில்ல. அதை சரிபண்ணிட்டு யார்யாருக்கெல்லாம் உண்மையிலேயே கஷ்டப்படுற பெண்களுக்குவரலையோ அந்த ஆயிரம் ரூபாய் தருகிற ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி," என்றார்.

அமைச்சர் தற்போது வாக்குறுதி அளித்துள்ள நிலையில் விடுப்பட்ட மற்றும் உண்மையில் கஷ்டப்படுகிற பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்

# கொடிவேரி அணையில் இருந்து தடப்பள்ளிஅரக்கன் கோட்டை பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு



கோபி, டிச.13

ஈரோடு மாவட்டம் கோபி செட்டிபாளையம் அருகே உள்ள கொடிவேரி அணையில் இருந்து தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால்களில் 2ம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கோபி அருகே உள்ள கொடிவேரி அணையில் இருந்து ஆண்டு தோறும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனவாய்க்கால்களுக்கு இரண்டு போக சாகுபடிக்கு தண்ணீர்திறக்கப்படுவது வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில் 2ம் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி தடப்பள்ளி, அரக்கன் கோட்டை விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். அரசு அதை ஏற்று தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் இன்று காலை கொடிவேரி அணையில் இருந்து தடப்பள்ளி. அரக்கன்கோட்டை பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அதை பொதுப்பணித் துறை அதிகாரிகள், கொடிவேரி அணை பாசனதாரர் சங்க நிர்வாகிகள் மற்றும் கலந்து கொண்டு மதகை திருகி தண்ணீரை திறந்து விட்டனர். இதில் நீர்வளத் துறை உதவி செயற்பொறியாளர் கல்பனா, உதவி பொறியாளர்கள் குமார், ரத்தினகிரி உள்பட பலர் கலந்து கொண்டர். தண்ணீரானது சீறிப்பாய்ந்து வாய்க்காலில் சென்றது. கொடிவேரி அணைமூலம் 25 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறும் நிலையில் இன்று திறக்கப்பட்ட தண்ணீர் தொடர்ந்து 120 நாட்களுக்கு 8.5 டி.எம்.சி. அளவிற்கு வழங்கப்படும்.

உரிய காலத்தில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதைத்தொடர்ந்து பாசன சங்க நிர்வாகிகள் கூறும்போது, தமிழக அரசு தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு உரிய காலத்தில் தண்ணீர்திறக்க உத்தரவிட்டதற்கு நன்றி தெரிவித்தனர்.

# மகளிருக்கு இலவச பயணம் அவசியமா? என ஆய்வு



சென்னை, டிச.13

நகர பஸ்களில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் வகையில் குறிப்பிட்ட வகையிலான பஸ்களைதமிழகஅரசு இயக்கி வருகிறது. அதேபோன்று அனைத்து வகையானபஸ்களிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த 2 சலுகைகளும் அவசியமா? என்பது குறித்து தணிக்கை துறை ஆய்வு மேற்கொண்டுள்ளது.


அந்த ஆய்வின் படி, இலவச சலுகை பயணங்களை பொறுத்த மட்டில் ஏழை மக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என 53 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலவச சலுகை பயணம் பயன் உள்ளதாக இருப்பதாக 90 சதவீத பெண்கள் தெரிவித்துள்ளனர். கட்டணம் செலுத்தும் பயணிகளை போல் நடத்தப்படுகிறீர்களா? என்ற கேள்விக்கு 69 சதவீதம் பேர் இல்லை என பதில் அளித்துள்ளனர்.

இலவச பயண சலுகையால் மட்டுமே கல்வியை தொடரமுடிகிறது என 62 சதவீதம் மாணவர்கள் பதில் அளித்துள்ளனர்.

இலவச பயணத்தால் ஒவ்வொருவரும் மாதம் தோறும் ரூ.637 சேமிக்க முடியும் என மாணவர்கள், பெண்கள் தெரிவித்துள்ளனர்.

# ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிப்பு



மண்டபம், டிச.13

இலங்கை அருகே தென் மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களை புரட்டிப் போட்டது. குறிப்பாக கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டு சென்ற அந்த புயல் தாக்கத்தில் இருந்து பொது மக்கள் மீண்டு வருவதற்குள் அடுத்ததாக மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் சென்னை மண்டல அறிவிப்பின்படி, இந்திய கடற்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் எதிரொலியாக ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலில் பலத்த காற்று வீசும். அதன் வேகம் மணிக்கு 35 முதல் 45 கி.மீட்டராகவும், அதிகபட்சம் 55 கி.மீ. வரை வீசக்கூடும் என்றும், இதன் காரணமாக இன்றும், நாளையும் தமிழகத்தில் தென் மாவட்டங்களில் மிக கன மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. டெல்டா உள்ளிட்ட மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு உள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கடலோர மாவட்டமான ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று அதிகாலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது.

அதைத்தொடர்ந்து ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் பலத்த சூறைகாற்று வீசி வருகிறது. பாம்பன் கடல் பகுதியில் வழக்கத்தை விட அதிக உயரத்திற்கு அலைகள் எழுந்து கரையில் மோதின. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று முதல் ராமநாதபுரம் மாவட்டத்தில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் மறு அறிவிப்பு வரும்வரை கடலுக்கு செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. அதன்படி இன்று கடலுக்கு செல்வதற்கான அனுமதி டோக்கன் வழங்கப்படவில்லை.

கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டதையொட்டி ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு கடலோர பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால் படகுகள் ஒன்றோடொன்று மோதி சேதம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மீனவர்கள் முன்கூட்டியே எடுத்துள்ளனர்.

மீன்பிடிக்க ஏற்பட்டுள்ள தடையால் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், மீன்பிடி தொழிலை சார்ந்தவர்கள் கடுமையான பாதிப்பிற்கு ஆளாகியுள்ளனர். ஏற்கனவே அடுத்தடுத்து மீனவர்கள் சிறைபிடிப்பு, இயற்கை சீற்றங்கள், இலங்கை கடற்படையை கண்டித்து போராட்டம் உள்ளிட்ட காரணங்களால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது காற்றழுத்த தாழ்வு நிலையால் ராமேசுவரம், பாம்பன் உள்ளிட்ட துறைமுகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. மீன்பிடி தொழில் சார்ந்த வர்த்தகமும் பாதிக்கப்பட்டு உள்ளது.

# கலைஞர் கைவினை திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் தமிழ்நாடு அரசு



சென்னை, டிச.13

தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலும், கைவினைஞர்களைத் தொழில் முனைவோர்களாக உயர்த்திடும் உன்னத நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி "கலைஞர் கைவினைத்திட்டம்" என்ற பெயரில் தமிழ்நாட்டிற்கு என விரிவான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கான அரசு ஆணை சில நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.50,000/ வரை 25 சதவீதம் மானியத்துடன் கூடிய ரூ.3 லட்சம் கடனுதவியும், 5 சதவீதம் வரை வட்டி மானியமும் வழங்குவதோடு, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குறைந்தபட்ச வயது 35 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மரவேலைப்பாடுகள், படகு தயாரித்தல், உலோக வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல், கண்ணாடி வேலைப்பாடுகள், மண்பாண்டங்கள், சுடுமண் வேலைகள், கட்டட வேலைகள், கூடை முடைதல், கயிறு. பாய் பின்னுதல், துடைப்பான்கள் செய்தல். பொம்மைகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், மீன் வலைதயாரித்தல், தையல் வேலை, நகைசெய்தல், சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை போன்ற தொழில்கள்.

துணி வெளுத்தல் தேய்த்தல், இசைக்கருவிகள்தயாரித்தல், துணி நெய்தல் மற்றும் துணிகளில் கலை வேலைப்பாடுகள் செய்தல், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், பாசிமணி வேலைப்பாடுகள், மூங்கில், சணல், பனை ஓலை. பிரம்பு வேலைப்பாடுகள், ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், கண்ணாடி வேலைப்பாடுகள், சுதை வேலைப்பாடுகள். பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள் மற்றும் கைவினைப் பொருள்கள் உள்ளிட்ட 25 வகையான தொழில்களுக்குக் கடன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இத்திட்டத்தின் வழி பயன்பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. www.msmeonline.in.gov.in என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# செல்போனில் வீடியோ எடுத்த வாலிபரை துரத்திய காட்டு யானை



வடவள்ளி, டிச.13

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் சுற்று வட்டார பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அதிலும் குறிப்பாக இரவு நேரத்தில் வனத்தில் இருந்து வெளியேறும் யானைகள், விவசாய நிலங்கள், குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து பொருட்கள், விளை நிலங்களை சேதப்படுத்துகிறது.

இதனால் யானை நடமாட்டத்தை கட்டுப்படுத்த வனத்துறையினர் தீவிரநடவடிக்கைஎடுத்து வருகின்றனர். மேலும் பொதுமக்கள் காட்டு யானைகளை பார்த்தால் அருகில் செல்ல வேண்டாம். அதனை விரட்டவோ, செல்போனில் வீடியோ எடுக்கவோ கூடாது என்று அறுவுறுத்தி வருகின்றனர்.

இருப்பினும் வாலிபர்கள் சிலர் காட்டு யனையுடன் செல்பி எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவது தொடர்கதையாக நீடித்து வருகிறது.

இந்தநிலையில் தொண்டாமுத்தூர் அடுத்த நரசீபுரம் வைதேகி நீர்வீழ்ச்சி சாலையில் உள்ள குடியிருப்பு பகுதியில் சம்பவத்தன்று ஒற்றை காட்டு யானை ஒன்று உலா வந்தது. அப்போது அந்த பகுதியை சேர்ந்த ஒரு வாலிபர் யானையை பார்த்ததும் செல்போனில் வீடியோ எடுத்தார். இதனை பார்த்த காட்டு யானை ஆக்ரோஷம் அடைந்து வாலிபரை ஓட, ஓட விரட்டியது. தொடர்ந்து அந்த வாலிபர் அருகே இருந்த வீட்டுக்குள் சென்று மயிரிழையில் உயிர்தப்பினர்.

இருப்பினும் வாலிபர் பதுங்கிய வீட்டை சுற்றி சுற்றி வந்த காட்டு யானை ஆக்ரோஷத்துடன் அந்த வீட்டின் முன்பாக நின்றிருந்த ஆட்டாவை முட்டி தள்ளியது. பின்னர் அங்கிருந்து சென்று விட்டது.

இதற்கிடையே செல்போனில் வீடியோ எடுத்த வாலிபரைகாட்டுயானை விரட்டும் காட்சிகள் இணையத்தளத்தில் வரைலாக பரவி வருகிறது.

## விஸ்வகர்மா திட்டமும், கலைஞர் கைவினைத் திட்டமும் ஒன்றா?

சென்னை,டிச.13

மத்திய அரசின் விஸ்வ கர்மா திட்டத்துக்கு தமிழக அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தால் மத்தியமாநில அரசுகளுக்கு இடையே வார்த்தை போர் நிலவி வருகிறது. இந்த சூழலில் தமிழக அரசு, கலைஞர் கைவினைத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளது. அந்த திட்டத்தின் சிறப்பம்சங்களையும், அதன் மூலம் பயன் பெறுவதற்கு 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் நேற்று அறிவிப்பு வெளியிட்டது.

இந்த நிலையில், மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டமும், தமிழக அரசின் கலைஞர் கைவினைத் திட்டமும் ஒன்றுதான் என்று சமூக வலைதளங்களில் ஒரு தகவல் வேகமாக பரவி வருகிறது. இதனை தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கானதகவல்சரிபார்ப்பகம் மறுத்துள்ளது. மேலும் இந்த இரண்டு திட்டங்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் விஸ்வ கர்மாதிட்டத்தில்இணைய உள்ள விதிகளில் 'குடும்ப அடிப்படையிலான பாரம்பரிய தொழில் செய்திருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் தேதியில் 18 வயது நிரம்பி இருக்கவேண்டும். அதே வேளையில், விண்ணப்பிக்கும் முன்பே அத்தொழிலில் ஈடுபட்டிருக்கவேண்டும்" என்று உள்ளது. மேலும், அடிப்படை பயிற்சியும், உயர்நிலை பயிற்சியும் வழங்குதல், அவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், கடன் தொகை வழங்குதல் ஆகியவையே இத்திட்டத்தின் செயல்பாடுகள்.

இது, தங்கள் குடும்ப தொழிலில் 18 வயதுக்கு முன்பே ஈடுபட தூண்டும் வகையில் உள்ளது. மேலும் மாணவர்களை உயர்கல்வி கற்கும் ஆர்வத்தை குறைத்து குலத் தொழிலில் தள்ளும் என்பதால் இதில் தமிழ்நாடு அரசு இணையவில்லை.

குலத்தொழில் ஊக்குவிப்பாக இல்லாமல் மாணவர்கள் உயர்கல்வி கனவை சிதைக்காமல் அதேநேரத்தில் இவ்வகை தொழிலில் ஈடுபடுவோருக்கு உதவும் வகையில் ஒரு திட்டம் வேண்டும் என 'கலைஞர் கைவினைத் திட்டம்' முழுக்க, முழுக்க தமிழ்நாடு அரசின் நிதியில் செயல்படுத்தப்படுகிறது. இதில் இணைவதற்கான வயது குறைந்தபட்ச வரம்பு 35 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்ப, வகுப்பு அடிப்படையில் அல்லாமல் 25 கைவினைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே மாணவர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாமல், வகுப்பு அடிப்படையில் எனசுருங்காமல், தொழிலில் ஈடுபடுவோருக்கு மட்டும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்று (நேற்று) தமிழ்நாடு அரசு சார்பாக வந்த அறிவிப்பில் விண்ணப்பிக்க தகுதி பதில் 35 வயது நிரம்பியவர்களுக்கு என்றும், எந்த வகுப்பினராகவும் இருக்கலாம் என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 2 திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை புரிந்து கொள்ளாமல் பலரும் தவறான தகவல்களை பரப்பிவருகின்றனர்என்று தகவல் சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது.

## `கியூஆர் கோடு' பான்கார்டு பெற ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்: ரூ.50 செலுத்தினால் வீடு தேடி வரும்

சென்னை, டிச.13

இந்தியாவில் வங்கிக்கணக்கு தொடங்குவதற்கு பான்கார்டு கட்டாயம் ஆகும். அதே போல் ரூ.10 லட்சத்திற்கு நகை, வாகனம் வாங்குவதற்கும், வருமான வரி செலுத்துவதற்கும் பான்கார்டு நிச்சயம் தேவை.

இந்தியாவில் கடந்த மார்ச் 31ந்தேதி நிலவரப்படி 42 கோடியே 10 லட்சம் ஆண்களும், 31 கோடியே 5 லட்சம் பெண்களும் என மொத்தம் 73 கோடியே 15 லட்சம் பேர் பான்கார்டு வைத்திருக்கிறார்கள். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகம் ஆகும்.

இந்த நிலையில் மத்திய அரசு, ஆதார் போன்று பான்கார்டுகளையும் டிஜிட்டல் முறையில் வழங்க முடிவு செய்தது. அதற்காக ரூ.1,435 கோடி செலவிலான 'பான் கார்டு2' திட்டத்திற்கு மத்திய மந்திரிசபை கடந்த மாதம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டத்தின்படி ஆன்லைன் மூலம் மட்டுமே பொதுமக்கள் பான் கார்டுகளுக்கு விண்ணப்பிக்க முடியும். இதற்காக ஒரு தனி 'போர்டல்' உருவாக்கப்பட உள்ளது.

அதே போல் பொதுமக்கள் செல்போன் எண், இமெயில் முகவரி மற்றும் புகைப்படங்களை எளிதாக 'அப்டேட்' செய்து கொள்ளலாம்.

இப்போது ஆதார் எண் கொடுத்து கைரேகை வைத்தால், அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தி கொள்ளலாம். மேலும் டிஜிட்டல் 'லாக்' மூலம் ஆதாரை 'லாக்' செய்யலாம்.

அதேசமயம் பான்கார்டிலும் கொண்டுவரப்படுகிறது. அதற்கு அச்சாரமாக பான்கார்டிலும் 'கியூஆர் கோடு' வழங்கும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. எனவே 'கியூஆர் கோடு' பான்கார்டு வேண்டுபவர்கள், அதற்காக விண்ணப்பிக்கலாம்.

அதாவது பான்கார்டுகள் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (என்.எஸ்.டி.எல்.) மற்றும் யு.டி.ஐ. உள்கட்டமைப்பு தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் லிமிடெட் (யு.டி.ஐ.ஐ.டி.எஸ்.எல்) ஆகியவை மூலம் தான் வழங்கப்படுகிறது. இதுதவிர வருமானவரித்துறை மூலம் உடனடி இபான்கார்டு பெற்றுக் கொள்ளலாம்.

எனவே ஏற்கனவே பான் கார்டு வைத்திருப்பவர்கள், என்.எஸ்.டி.எல். மூலமாக வாங்கி இருந்தால் https://www.onlineservices.nsdl.com/paam/ReprintEPan.Html என்ற இணையதளத்திலும், யு.டி.ஐ.ஐ.டி.எஸ்.எல். மூலம் வாங்கி இருந்தால் https://www.pan.utiitsl.com/PANONLINE/CheckPANreprint.Action என்ற இணையதளத்திலும் எளிதாக விண்ணப்பிக்கலாம்.

ஒருவேளை உங்களுக்கு எது என்று தெரியாவிட்டாலும், நீங்கள் ஏதாவது ஒரு இணையதளத்தில் விண்ணப்பித்தால் அதுவே அது சரியானதா அல்லது நீங்கள் மற்றொன்றில் விண்ணப்பிக்க வேண்டும் என்பதனை சொல்லிவிடும்.

இந்த இணையதளத்தில் நீங்கள் பான்கார்டு எண், ஆதார் எண், பிறந்த மாதம் மற்றும் ஆண்டை குறிப்பிட்டு அதனை சமர்ப்பிக்க வேண்டும். அப்போது முகவரி, செல்போன் எண், இமெயில் முகவரி போன்றவை தெரியும். அது சரியானதா என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதன்பின்பு உங்களுடைய மெயில், செல்போன் அல்லது இரண்டுக்கும் ஓ.டி.பி.அனுப்பலாம். நீங்கள் அதில் எதை தேர்வு செய்கிறீர்களோ, அதற்கு ஓ.டி.பி. வரும். அந்த ஓ.டி.பி.யை கொடுத்து, அது ஏற்று கொள்ளப்பட்டால் ரூ.50 கட்டணம் செலுத்த வேண்டும்.

கட்டணத்தை செலுத்தி முடித்து விட்டால் போதும், உங்களது முகவரிக்கே 30 நாட்களுக்குள் பான்கார்டு வீட்டுக்கு வந்துவிடும்.

ஒருவேளை உங்களது பான்கார்டில் செல்போன் எண் மற்றும் இமெயில் முகவரி தவறாக இருந்தால் முதலில் நீங்கள் அதனை அந்த இணையதளத்தில் உள்ள வசதிகள் மூலம் திருத்திக்கொள்ள வேண்டும். அதேபோல் முகவரி மாறி இருந்தாலும், இப்போது உள்ள முகவரியை அப்டேட் செய்து கொள்ளலாம். இந்த பணியினை ஆதார் கே.ஒய்.சி. மூலமாக எளிதில் செய்து கொள்ளலாம்.

## பாலின பாகுபாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பேரணி



பெரம்பலூர். டிச.13

பெரம்பலூர் பாலக்கரை பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களின் பாலின பாகுபாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு இயக்க பேரணியை சார் ஆட்சியர் கோகுல் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

குழந்தை திருமணம், குடும்ப வன்முறை என பாலின பாகுபாடு காரணமாக நிகழ்த்தப்படும் பாதிப்புகள்குறித்துபொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பெரம்பலூர் பாலக்கரை பகுதியில் சுமார் 300 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட பாலின பாகுபாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு இயக்க பேரணியை சார் ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியானது பெரம்பலூர் பாலக்கரையில் தொடங்கி கிருஷ்ணா திரையரங்கம் வழியாக ரோவர் வளைவு வரை சென்று முடிவுற்றது. இப்பேரணியில் குடும்ப வன்முறையை தடுப்போம், பெண் உரிமையைப் பாதுகாப்போம், பாலின சமத்துவத்தை பரப்புவோம், பெண்களை இழிவுபடுத்துவதை புறக்கணிப்போம், பெண்களை அடிப்பதும், திட்டுவதும் வன்முறை என்பதைபுரிந்துகொள்வோம், ஒன்றிணைவோம் குரல் கொடுப்போம் வன்முறைக்கு எதிராக, பெண்களுக்கு குடும்பத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவோம், பாலின வன்முறைக்கு முடிவு கட்டுவோம், பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வோம், உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கையில் ஏந்தியவாறு நடந்து சென்று பொதுமக்களிடையேவிழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் மகளிர் திட்ட இயக்குநர் அமுதா, உதவி திட்ட அலுவலர்கள் பெர்லினா, முருகதாஸ், கார்த்திகேயன், சங்கர் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

வேலூர், டிச.13

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் வேலூர் மாவட்டம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வேலூர் அண்ணா கலையரங்கம் அருகே நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஞானவேல் தலைமை தாங்கினார். மேலும் மாவட்டச் செயலாளர் ஏ.வி.எம்.குமார் மற்றும் பொருளாளர் அமீன் அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மற்றும் வேலூர் மாவட்ட இளைஞர் அணி செயலாளர்அருண்பிரசாத் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 10.10.2024 முதல் வணிக பயன்பாட்டிற்கு உள்ள கட்டிடங்களுக்கு கொடுக்கும் வாடகைக்கு 18 சதவீதம் ஜிஎஸ்டி என்பதை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும். ஆயத்த ஆடைகளுக்கு 5% மற்றும் 18% வரி என்பது மிகவும் சுமையாக உள்ளது. இந்நிலையில் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் 28% வரி விதிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதனை மத்திய அரசு அமல்படுத்தக் கூடாது என்று மேலும் ஆறு அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

## அரசு ஓட்டலை விலை பேசிய விக்னேஷ் சிவன்



2012ம் ஆண்டு நடிகர் சிம்புவை வைத்து வெளியான 'போடா போடி' திரைப்படத்தை இயக்கி தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் விக்னேஷ் சிவன். இவர் தற்போது தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத இயக்குனர்களில் ஒருவராக வலம் வருகிறார். 2015ம் ஆண்டு விஜய் சேதுபதி, நயன்தாராவை வைத்து 'நானும் ரவுடிதான்' படம் இயக்கினார். அப்படத்தின் போது நயன்தாராவின் காதல் ஏற்பட்டு, 2022ம் அவரை திருமணம் செய்து கொண்டார். இவர் தற்போது பிரதீப் ரங்கநாதனை வைத்து 'எல்ஐகே' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

இதற்கிடையில் விக்னேஷ் சிவன் நேற்று புதுவை சென்றுள்ளார். புதுவை சட்டசபை வளாகத்திற்கு சென்ற அவர் சுற்றுலாத்துறை அமைச்சர் லட்சுமிநாராயணனை சந்தித்து பேசினார். அப்போது புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள அரசுக்கு சொந்தமான 'சீகல்ஸ்' ஓட்டலை விலை பேசினார். இதனை கேட்ட அமைச்சர் லட்சுமி நாராயணன் அதிர்ச்சி அடைந்தார். அமைச்சர் அதற்கு அது அரசு சொத்து என்றார். உடனே விக்னேஷ் சிவன், சீகல்ஸ் ஓட்டலை ஒப்பந்த அடிப்படையிலாவது வாடகைக்கு தருவீர்களா? என கேட்டுள்ளார்.

அதற்கு அமைச்சர், 'புதுவை அரசின் சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சார்பில் சீகல்ஸ் ஓட்டல் இயங்கி வருகிறது. இங்கு ஏராளமான ஊழியர்கள் பணி செய்து வருகிறார். அதனை ஒப்பந்த அடிப்படையில் வழங்க முடியாது' என்றார். தொடர்ந்து பேசிய விக்னேஷ் சிவன், புதுவையில் கடற்கரை பகுதிகள் தனியார் வசம் உள்ளன. அதில் ஏதாவது ஒன்றாவது கிடைக்குமா? என்று கேட்டார். அதற்கு, புதுவையில் உள்ள பல்வேறு கடற்கரைகள் கடந்த 2017ம் ஆண்டு டெண்டர் கோரப்பட்டு ஏலத்தின் அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அதில் எதுவும் செய்ய முடியாது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் விக்னேஷ் சிவன், புதுவைக்கு வரும் சுற்றலா பயணிகளை கவரும் வகையில் இசை நிகழ்ச்சிகள் நடத்த ஏதாவது இடம் கிடைக்குமா? என்று கேட்டுள்ளார். அப்போது அமைச்சர் லட்சுமி நாராயணன் கூறுகையில், 'புதுச்சேரி துறைமுக வளாகத்தில் பொழுதுபோக்கு மையம் ஒன்றை கட்டி வைத்துள்ளோம். அங்கு ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பார்வையாளர்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளை பார்க்க முடியும். அதற்கு அரசு நிர்ணயத்துள்ள கட்டணத்துடன், ஜி.எஸ்.டி. சேர்த்து செலுத்தினால் போதும். நீங்கள் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் முன்பதிவு செய்து நிகழ்ச்சியை நடத்திக்கொள்ளலாம்' என்றார். இதற்கு சம்மதம் தெரிவித்த விக்னேஷ் சிவன், துறைமுக வளாகத்தில் உள்ள பொழுதுபோக்கு மையத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

## மணிகண்டன் நடித்துள்ள 'குடும்பஸ்தன்' படத்தின் அப்டேட்



'காதலும் கடந்து போகும்', 'காலா', 'விக்ரம் வேதா' போன்ற பல படங்களில் முன்னணி நடிகராக நடித்தவர் மணிகண்டன். 'ஜெய் பீம்' திரைப்படத்தில் அவருடைய நடிப்பின் மூலம் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். அறிமுக இயக்குனர் பிரபுராம் வியாஸ் இயக்கத்தில் நடிகர் மணிகண்டன் நடித்த 'லவ்வர்' படம் வெளியானது. இளைய தலைமுறையிடம் வரவேற்பைப் பெற்று வசூல் ரீதியான வெற்றிப்படமாக அமைந்தது. இவர் நடிகராக மட்டுமல்லாமல் பல திரைப்படங்களுக்கு கதை, வசனமும் எழுதியுள்ளார். தற்போது, 'நித்தம் ஒரு வானம்' படத்தின் தயாரிப்பு நிறுவனமான சினிமாக்காரன் தயாரிப்பில் புதிய படத்தில் நடிக்கிறார். இந்த படத்தினை நக்கலைட்ஸ் யூட்யூப் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியிருக்கிறார். இந்த படத்திற்கு 'குடும்பஸ்தன்' என பெயரிடப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகர் சிம்பு வெளியிட்டார். இந்த படத்தில் மணிகண்டன்உடன்இணைந்துசான்விமேக்னா, குருசோமசுந்தரம், ஆர்சுந்தர்ராஜன்ஆகியோர்முக்கியகதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இந்த படத்திற்கு வைஷாக் இசையமைக்கிறார். இந்நிலையில் இன்று (12ந் தேதி) இந்த படம் தொடர்பான முக்கிய அறிவிப்பு வெளியாகும் என படக்குழுவினர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விஜய் தேவரகொண்டாவுடன் ராஷ்மிகா மந்தனா ரகசிய நிச்சயதார்த்தம்?

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பவர் ராஷ்மிகா மந்தனா. தமிழில் 'சுல்தான்', 'வாரிசு' படங்களில் நடித்துள்ள ராஷ்மிகா மந்தனா, தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்து வருகிறார். இவரது நடிப்பில் சமீபத்தில் பான் இந்தியா அளவில் வெளியான 'புஷ்பா 2' படம் மிகப்பெரிய வசூல் சாதனையை நிகழ்த்தி உள்ளது.

இதற்கிடையில் ராஷ்மிகா மந்தனாவும், தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவும் காதலிப்பதாக தொடர்ந்து கிசுகிசுக்கள் வருகின்றன. இவர்கள் ஏற்கனவே 'கீதம் கோவிந்தம், டியர் காம்ரே'ட் ஆகிய படங்களில் இணைந்து நடித்திருந்தனர். இதற்கிடையில், இருவரும் ஜோடியாக சுற்றும் புகைப்படங்களும், ஓட்டல்களில் ஒன்றாக அமர்ந்து உணவருந்தும் படங்களும் வெளியானதை பார்த்து பலரும் காதலை உறுதிப்படுத்தி பேசினர். விஜய் தேவரகொண்டாவின் வீட்டு நிகழ்ச்சிகளில் ராஷ்மிகா தவறாமல் கலந்து கொள்கிறார். 'புஷ்பா 2' படம் பார்க்கவும் விஜய்தேவரகொண்டா குடும்பத்தினருடன் ராஷ்மிகா தியேட்டருக்கு சென்ற வீடியோவும் வெளியானது.

இவர்களின் திருமணம் குறித்த தகவல் ஒன்று சமூக வலைத்தளத்தில் தீயாக பரவி வருகிறது. அதே போல் சென்னையில் நடந்த, புஷ்பா 2 படத்தின் புரமோஷன் நிகழ்ச்சியில் 'நீங்கள் திருமணம் செய்து கொள்ள உள்ளவர் ஒரு நடிகரா? என தொகுப்பாளர் கேட்டதற்கு இது எல்லாருக்குமே தெரிந்தது தான் என கூறி, விஜய் தேவரகொண்டா உடனான காதலை மறைமுகமாக வெளிப்படுத்தினார். இந்த நிலையில் ராஷ்மிகாவுக்கும், விஜய் தேவரகொண்டாவுக்கும் ரகசியமாக நிச்சயதார்த்தம் முடிந்து உள்ளதாகவும், இவர்கள் திருமணம் ஆறு மாதங்களுக்கு பிறகு நடைபெற இருப்பதாகவும் தெலுங்கு இணைய தளங்களில் தகவல் வெளியாகி வைரலாகி வருகிறது.

## பார்டர் கவாஸ்கர் கோப்பை: பும்ராவுக்கு பதிலடி கொடுக்க தயார் ஆஸ்திரேலிய வீரர் சவால்



ஆஸ்திரேலியா இந்தியா இடையே 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. ஆனால் 2வது போட்டியில் இந்தியாவை தோற்கடித்த ஆஸ்திரேலியா தொடரை சமன் செய்து பதிலடி கொடுத்துள்ளது.

அதனால் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்தியா அடுத்த 3 போட்டிகளிலும் கட்டாயம் வென்றாக வேண்டிய இக்கட்டான சூழலில் உள்ளது. அந்த சூழலில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது போட்டி வரும் 14ம் தேதி காபா மைதானத்தில் தொடங்க உள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான நாதன் மெக்ஸ்வீனி பிரிஸ்பேன் மைதானத்தில் பும்ராவை மிகச்சிறப்பாக எதிர்கொள்ள உள்ளதாக கூறியுள்ளார். இந்த தொடரில் அறிமுகம் ஆன அவர் இதுவரை ஆட்டமிழந்துள்ள 3 முறையும் (முதல் போட்டியில் 2 முறை, 2வது போட்டியில் 1 முறை) பும்ரா பந்து வீச்சிலேயே வீழ்ந்துள்ளார். இதனால் இம்முறை காபா மைதானத்தில் அவருக்கு பதிலடி கொடுப்பேன் என்று சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "பும்ராவுக்கு எதிராக விளையாடும்போது மிகவும் கடினமாக இருந்தது. என்னுடைய கெரியரின் ஆரம்பத்திலேயே பும்ராவைப் போன்ற ஒரு பவுலரை எதிர்கொண்டு உள்ளேன். அதனால் இதை விட கடினமான சூழல் இருக்காது என்று கருதுகிறேன். அவருடைய ஆக்சன் வித்தியாசமாக இருக்கிறது. முதல் இரண்டு போட்டிகளில் அவரது பந்துவீச்சை எதிர்கொண்டதிலிருந்து நிறைய கற்றுக் கொண்டேன். நிச்சயம் அடுத்த போட்டியில் அவருக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். முதல் தர கிரிக்கெட்டில் நான் இந்த மைதானத்தில்தான் அறிமுகமானேன். அதனால் இந்த மைதானத்தில் எப்படி விளையாட வேண்டும் என்று எனக்கு நன்றாக தெரியும். அதை வைத்து பும்ராவிற்கு பதிலடி கொடுக்க முடியும் என்று நம்புகிறேன்" என கூறினார்.



## ஸ்சை தவற விட்ட ஜெய்ஸ்வால்.. கோபமடைந்த ரோகித்.. நடந்தது என்ன..?

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், அடிலெய்டில் நடைபெற்ற 2வது போட்டியில் ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றுள்ள நிலையில், தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது போட்டி பிரிஸ்பேனில் நடைபெற உள்ளது.

இந்த போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணியினர் நேற்று அடிலெய்டில் இருந்து பிரிஸ்பேனுக்கு புறப்பட்டு சென்றனர். அப்போது அடிலெய்டில் தங்கியிருந்த ஓட்டலில் இருந்து பஸ் மூலம் விமான நிலையம் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை 10 மணியளவில் விமானம் புறப்படும் என்ற நிலையில் இந்திய வீரர்கள் அனைவரும் 8.30 மணிக்கே ஓட்டலில் இருந்து பஸ்சில் ஏறினர். ஆனால் தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜெய்ஸ்வால் மட்டும் தனது அறையை விட்டு வெளியேறவில்லை. சுமார் 20 நிமிடங்கள் அவருக்காக காத்திருந்தனர். அதிலும் அவர் வராததால் கோபமடைந்த ரோகித் சர்மா பாதுகாப்பு அலுவலரிடம் ஏதோ பேசி விட்டு பஸ்சில் ஏறினார். இதனையடுத்து ஜெய்ஸ்வாலை விட்டு விட்டு பஸ் அங்கிருந்து புறப்பட்டது. பேருந்து சென்று ஒரு ஐந்து நிமிடத்திற்கு பிறகு ஓட்டலில் இருந்து வெளியே வந்த ஜெய்ஸ்வால் பஸ் இல்லாததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இருப்பினும் அவருக்காக ஏற்கனவே கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் அவர் விமான நிலையம் சென்றுள்ளார். ஜெய்ஸ்வாலின் செயல் ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.